சட்டப் பேரவையில் அமைச்சர் அர.சக்கரபாணி பதிலுரை... 6 ஆம் பக்கத் தொடர்ச்சி

அரசு நலத்திட்டங்களுக்குப் பொருட்களை விரைந்து அனுப்பிட இந்த செயல்முறைக் கிடங்குகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு 3 புதிய வட்ட செயல்முறைக் கிடங்கு வளாகங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டு 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடலூர் மாவட்டம் ரீமுஷ்ணம் வட்டத்தில் 2.000 மெ.டன் கொள்ளளவு கொண்ட வளாகமும் இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை வட்டத்தில் 13 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு வளாகமும், செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் வட்டத்தில் 11 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு வளாகமும், கிடங்கு அலுவலகங்கள், சுமைதூக்குவோர் ஓய்வறைகள், சுற்று ச்சுவர் / பாதுகாப்பு வேலி மற்றும் சாலை வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகளுடன் கூடிய மொத்தம் 13,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட வட்ட செயல்முறைக் கிடங்கு வளாகங்கள் 29 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

14. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்மணிகள் மேற்கூரை அமைப்புடன்கூடிய சேமிப்புத் தளங்கள் மற்றும் இடையிருப்புக் கிடங்குகளில் இருப்பு வைக்கப்படுகின்றன. மேலும், கொள்முதல் அதிகமாக உள்ள நேரங்களில் திறந்த வெளியிலும் இருப்பு வைக்கப்படுகின்றன. புயல் மற்றும் பெருமழை போன்ற இயற்கைப் பேரிடர் காலங்களில் திறந்த வெளியில் இருப்பு வைக்கப்படும் நெல் மணிகள் அதிக அளவில் ஈரப்பதத்தினால் பாதிக்கப்படுகின்றன. எனவே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் "ஒரு நெல்மணி கூட வீணாகக் கூடாது" என்று ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ரூபாய் 25 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டில் 18,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன்கூடிய 6 நவீன நெல் சேமிப்புத் தளங்கள் நபார்டு நிதியுதவியுடன் அமைக்கப்படும்.

15. நாடு தழுவிய பொதுவிநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முக்கியப் பங்காற்றி வருகிறது. அதன்படி மாநிலத்தில் உள்ள 2.24 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு 34,793 நியாயவிலைக் கடைகளின்மூலம் கூட்டுறவுச் சங்கங்கள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் கடைகளின்மூலம் இன்றியமையாப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டம், உள்ளிட்ட அரசு நலத் திட்டங்களுக்கு தேவைப்படும் பொருட்களையும் பேரிடர் காலங்களில் மக்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களையும் சேமித்து வைக்க தற்பொழுது பயன்பாட்டில் உள்ள கிடங்குகளின் கொள்ளளவினை மேம்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், ஈரோடு, கள்ளக்குறிச்சி, நாமக்கல், ராணிபேட்டை, திருப்பூர், திருப்பத்தூர், வேலூர், திண்டுக்கல், தேனி, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், தென்காசி மற்றும் தூத்துக்குடி ஆகிய 17 மாவட்டங்களில் உள்ள கிடங்குகளின் கொள்ளளவினை அதிகரிக்க 28,250 மெ.டன் கொள்ளளவு கொண்ட 26 கூடுதல் கிடங்குகள் ரூபாய்.60.00 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

16. பொதுவிநியோகத் திட்டப் பயன்பாட்டிற்காக தற்பொழுது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுபாட்டில் மொத்தம் 16.36 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் உள்ளன. இவற்றிற்கான அடிப்படை வசதிகள் படிப்படியாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. சுற்றுச்சூழலை மேம்படுத்திடவும் பாதுகாப்பை அதிகரித்திடவும் சுற்றுசுவர் அமைப்பதும் கான்கிரிட் சாலைகளை நிறுவுவதும் அவசியமாகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு 22 மாவட்டங்களில் அமையபெற்றுள்ள 31 கிடங்கு வளாகங்களில் அடிப்படை வசதிகளான சாலை மற்றும் சுற்றுசுவர் கட்டமைப்புகள் ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் மேம்படுத்தப்படும்.

17. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தைப் பயன்படுத்தும் பல்வேறு சரக்கு வைப்பாளர்கள் மற்றும் வியாபாரிகளின் சரக்கு லாரிகள் எடையிடும் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் எடை மேடை வருமானத்தை உயர்த்துவதற்காகவும் கரூர், பாளையங்கோட்டை சேமிப்புக் கிடங்குகளில் உள்ள 30 மெ.டன். எடையளவு கொண்ட 2 எடைமேடைகள், அரக்கோணம், மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, சின்னசேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, அவிநாசி சேமிப்புக் கிடங்குகளில் உள்ள 40 மெ.டன். எடையளவு கொண்ட 7 எடை மேடைகள் மற்றும் பல்லடம், தேனி சேமிப்புக் கிடங்குகளில் உள்ள 50 மெ.டன் எடையளவு கொண்ட 2 எடைமேடைகள் ஆக மொத்தம் 11 சேமிப்புக் கிடங்கு வளாகங்களிலுள்ள எடைத்திறன் குறைவான எடை மேடைகளின் திறனை உயர்த்தி 60 மெ.டன் எடையளவு கொண்ட நவீன வசதியுடன் கூடிய குழியற்ற மின்னணு எடைமேடைகளாக ரூபாய் 2 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக மாற்றியமைக்கப்படும்.

18. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் கட்டுபாட்டிலுள்ள 60 சேமிப்புக் கிடங்குகளிலும் சரக்கு விவரம், சரக்கு இருப்பு, விடுவிப்பு, இடஒதுக்கீடு, காலியிட விவரம், சரக்கு வைப்பாளர்களின் விவரம், வாடகை செலுத்தப்பட்ட விவரம், நிலுவை விவரம் மற்றும் வாடகைக் கட்டணத் தள்ளுபடி விவரம், சரக்கு லாரிகள் இயக்கம், கிடங்கு மேலாண்மை, தரக் கட்டுபாடு மேலாண்மை, சரக்கு வைப்பாளர்களின் பதிவேடுகளைப் பராமரித்தல், தொழில் நுட்ப உபகரணங்கள் பயன்பாடு மற்றும் பதிவேடுகள் பராமரித்தல், உள் தணிக்கை, பூச்சி தடுப்புப் பணி மற்றும் பிற தினசரிப் பணிகளை ஒருங்கிணைத்து இணையதளம் வாயிலாக விரைவுபடுத்தவும், கண்காணித்திடவும் "கிடங்கு மேலாண்மைத் தீர்வு" (Warehouse Management solution) என்னும் மென்பொருள் ரூபாய் 2 கோடியே 72 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

19. 1958 ஆம் ஆண்டு முதல் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வரும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில், மொத்தம் உள்ள 272 சேமிப்புக் கிடங்கு கட்டடங்களில் 60 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட காஞ்சிபுரம், சேலம் நகரம், திருநெல்வேலி, விருத்தாசலம், திண்டுக்கல், நாகப்பட்டிணம், வேலூர், பொள்ளாச்சி மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள 9 பழமையான சேமிப்புக் கிடங்கு வளாகங்களில் உள்ள 33,900 மெ.டன் கொள்ளளவு கொண்ட 53 கிடங்கு கட்டடங்களின் மேற்கூரைகள், சுற்றுச்சுவர்கள், மின்சாரப் பணிகள், சாலைகள், சேமிப்புக் கிடங்கு அலுவலக கட்டடங்கள், சுமைதூக்குவோர் தங்கும் வசதிகள் போன்ற கட்டமைப்புகளுடன் ரூபாய் 22 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

20. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் அலகுகளில் தற்போது வழக்குகள் CCTNS வலைத்தளம் மூலம் பதிவு செய்யப்படுகின்றன. மாண்பமை உயர் நீதிமன்றம் தற்போது அனைத்து வழக்குகள் குறித்த தகவல்களை இணைய சேவைமூலம் பதிவேற்றம் செய்யும் முறையை அறிமுகப்படுத்தி உள்ளது. எனவே முதல் தகவல் அறிக்கை, குற்றப் பத்திரிக்கை மற்றும் ஏனைய வழக்குகள் குறித்த ஆவணங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய ஏதுவாக குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் அலகுகளுக்கு ரூபாய் 14 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும். வருடியுடன் கூடிய 41 அச்சுப்பொறிகள் (Scanner-cum-Printer) வழங்கப்படும். 4 மண்டல காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் 12 சரக காவல் துணை கண்காணிப்பாளர்கள் அலுவலகப் பணிகளை மின்னாளுமை மூலம் மேற்கொள்ளவும், காணொலிக் கூட்டங்கள் நடத்தவும் வழக்கு குறித்த தகவல்களை மாண்பமை நீதிமன்றத்தில் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கும் ரூபாய் 13 இலட்சம் மதிப்பீட்டில் 16 மடிக்கணினிகள் வழங்கப்படும்.

உறுப்பினர்கள் 59 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளீர்கள். உறுப்பினர்களுக்கு நான் இந்த மன்றத்திலே சிலவற்றிற்கு பதில் சொல்லியிருக்கிறேன், விளக்கம் தெரிவித்து இருக்கிறேன். சிலவற்றிற்கு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, அதை நிறைவேற்றுவதற்கு நான் கண்டிப்பாக முயற்சி எடுப்போன் என்று தெரிவித்து, உறுப்பினர்கள் கொடுத்து இருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி பதிலுரை அளித்தார்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.அதன்படி நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க மற்றும் அரசு சித்த மருத்துவமனை இணைந்து மாபெரும் இலவச சித்த மருத்துவம் முகாம் நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முகமது மீரான் மைதீன் ஏற்பாட்டில் நெல்லை டவுன் ஜாமியா பள்ளிவாசல் தெரு ஷாதுலியா ஸாவியா அரபி மதராஸாவில் வைத்து நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்று இலவச சித்த மருத்துவ முகாமை துவக்கி வைத்தார்.நிகழ்வில் மாலைராஜா, பரமசிவ ஐயப்பன், அருண்குமார், கருப்பசாமி கோட்டையப்பன், மிக்கேல், குரு ஜெசி, பொன்னையாபாண்டியன், நவநீதன், செல்வம்,அனிதா, பல்க்குமார், பெரியதுரை, சென்டு, போத்திக்கண்ணு, நெல்லை ரவி, ஆறுமுக ராஜா,கந்தசாமி, ரத்தினபாலா,முத்துமாரி, கணபதி,முருகன்,இனியன், தளபதி ஆறுமுகம், இம்மானுவேல், உலகநாதன், கிட்டு,டாக்டர்.சங்கர்,சுந்தர், ரவீந்தர்,ஆனந்த்,செந்தில், ஹமிதா,ஜோதி பிரியா,நெல்லை முத்தையா,அருணாசல தேவி, தேவிகா,மணிகண்டன் உள்பட கழகத்தினர்,பொதுமக்கள் ஜமாத் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

கடந்த 3 ஆண்டுகளில் 16.74 லட்சம் மாணவ- மாணவியர்க்கு

தரமான மிதிவண்டிகளே வழங்கப்பட்டுள்ளன!

பொய்ச் செய்திக்கு அரசு மறுப்பு!

சென்னை, ஜூலை 1- மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மிதிவண்டிகளின் தரம் குறித்து வெளிவந்த உண்மைக்குப் புறம்பான பத்திரிகைசெய்திக்கான அரசின் மறுப்பறிக்கை வருமாறு:-

தரம் குறைந்துள்ளதால், இலவசமாக வழங்கப்பட்ட மிதிவண்டிகளை விற்பனை செய்கிறார்கள் என்று தவறான செய்தி வெளிவந்துள்ளது.

மாணவ, மாணவியர்களின் நலன் கருதி ஆண்டுதோறும் இலவச மிதி வண்டிகள் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் ஆண்டுதோறும் தோராயமாக 5 இலட்சம் மிதி வண்டிகள் வழங்கப்படுகின்றது.

இந்த அரசு பொறுப்பேற்று, கடந்த 3 ஆண்டுகளாக 16,73,374 தரமான மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

மிதிவண்டிகள் ஒப்பந்தப்புள்ளி சட்ட விதிமுறைகளின்படி கொள்முதல் செய்யப்படுகின்றன. மிதிவண்டிகள் தரம் இரண்டு நிலைகளில் உறுதி செய்யப்படுகின்றது.

மிதிவண்டிகளை கிண்டியில் உள்ள CTAL(Chemical Testing Analytical Lab) நிறுவனத்தில் முழுமையாக Destructive Test செய்யப்பட்டு தர அறிக்கை (Quality Test Report) பெறப்படுகிறது. அதன் பின்னரே நிறுவனங்களுக்கு கொள்முதல் ஆணை வழங்கப்படுகிறது.

மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுவதற்கு முன்பாக, மிதிவண்டிகள் Specificationபடி தரமாக உள்ளது என்று உறுதி செய்யப்படுகிறது.

இச்செய்தி குறித்து கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தலைமையில் குழு அமைத்து கள ஆய்வு செய்து அறிக்கை அளித்துள்ளனர்.

அவ்வறிக்கையின்படி செல்வபுரம், மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட மிதிவண்டிகள் பயனுள்ளதாக இருப்பதாகவும், நல்ல நிலையில் அதனை பயன்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர். மிதிவண்டி தரம் சார்ந்து எவ்வித புகாரும் பெறப்படவில்லை எனவும் மிதிவண்டிகளை தனியார்களுக்கு விற்பனை செய்ததாக மாணவர்களால் தெரிவிக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாளிதழில் வெளிவந்த செய்தியில் குறிப்பிட்டுள்ள கடை ஆய்வு செய்யப்பட்டதில், அங்கிருந்த சில மிதிவண்டிகள் சிறு பழுதுகளை சரி செய்வதற்காக மாணவர்களால் கடையில் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், பழுதுநீக்கம் செய்யப்பட்டவுடன் மாணவர்கள் பெற்றுச் செல்வர் என்றும், அவை விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டவை அல்ல என்று தெரியவருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. மாணவ மாணவியருக்கு தரமான மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றது.

எனவே பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பான செய்தியாகும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா

நெல்லை மத்திய மாவட்டத்தில் மருத்துவ முகாம்!

டி.பி.எம்.மைதீன் கான் துவக்கி வைத்தார்!

நெல்லை, ஜூலை 1 - நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க.மற்றும் நெல்லை அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து மாபெரும் முழுமையான இலவச கண் பரிசோதனை முகாம் நெல்லை மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் எஸ்.ராஜா முஹம்மது ஏற்பாட்டில் நடைபெற்றது.இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் பங்கேற்று முகாமினை துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி,

நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவுறுத்தலின்படி,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆலோசனைப்படி கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 வது பிறந்தநாள் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க மற்றும் திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து மாபெரும் முழுமையான இலவச கண் பரிசோதனை முகாம் நெல்லை மத்திய மாவட்ட வழக்கறிஞரணி தலைவர் எஸ்.ராஜா முகம்மது ஏற்பாட்டில் மேலப்பாளையம் அம்பிகாபுரம் ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளியில் வைத்து நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் பங்கேற்று மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாமினை துவக்கி வைத்தார்.

இந்த முகாமில் பொது மக்களுக்கு கண்புரை,சர்க்கரை நோய்,கண் நீர் அழுத்த நோய்,குழந்தைகள் கண் நோய் போன்ற வைகளுக்கு பரிசோதனை செய்து உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது.

அதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. மேலும் கிட்டப்பார்வை தூரப்பார்வை வெள்ளெழுத்து உள்ளவர்களுக்கு கண் கண்ணாடிகள் ரூபாய் 150 முதல் ரூபாய் 400 வரை சலுகை விலையில் வழங்கப்பட்டது.

இந்த முகாமில் சுமார் 400 க்கும் மேற்பட்டோர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, கிறிஸ்தவ ஆலய பணியாளர் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் பங்கேற்று மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாமினை துவக்கி வைத்தார்.

இந்த முகாமில் பொது மக்களுக்கு கண்புரை,சர்க்கரை நோய்,கண் நீர் அழுத்த நோய்,குழந்தைகள் கண் நோய் போன்ற வைகளுக்கு பரிசோதனை செய்து உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது.

அதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. மேலும் கிட்டப்பார்வை தூரப்பார்வை வெள்ளெழுத்து உள்ளவர்களுக்கு கண் கண்ணாடிகள் ரூபாய் 150 முதல் ரூபாய் 400 வரை சலுகை விலையில் வழங்கப்பட்டது.

இந்த முகாமில் சுமார் 400 க்கும் மேற்பட்டோர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, கிறிஸ்தவ ஆலய பணியாளர்களின் வாரிய தலைவர் விஜிலா சத்யானந்த், மாநகராட்சி துணை மேயர் ராஜு, மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன்,மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் காமினி தேவன், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை அணி தலைவர் முகமது அலி,

மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன்,மத்திய மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன்,

வழக்கறிஞர் உத்திரநாயகம்,தொப்பி மைதீன், வெங்கடேஷ்,தொ.மு.ச. கருப்பசாமி,செல்வம் உள்பட கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நெல்லை மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் ராஜா முகம்மது செய்திருந்தார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மதுரை கே. தாவூது
ஜூலை 1 (2004)

மதுரை மாநகர் நெல்பேட்டை பகுதியில் வட்டக் கழக பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர், மாநகர் கழக துணைச் செயலாளர், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

இவர் நிர்வாகப் பொறுப்பில் இருந்தபொழுது மதுரை மாநகர் மாவட்டக் கழகத்திற்கு சொந்தமாக இடம் வாங்கி மேயர் முத்து மன்றம் என்ற பெயரில் கட்டிடம் கட்டி, தலைவர் கலைஞர் அவர்களை அழைத்துவந்து திறந்து வைத்தார்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சீன எல்லையில் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட 5 இராணுவ வீரர்கள்!

புதுடெல்லி, ஜூலை 1 - லடாக் தலைநகர் லேயிலிருந்து 148 கிமீ தொலைவில் உள்ள மந்திர் மோர் பகுதிக்கு அருகே நியோமோ சுஷூல் பகுதி அமைந்துள்ளது. சீன எல்லை அருகே அசல் கட்டுப்பாடு கோட்டுக்கு (எல்ஏசி) அருகே நேற்று முன்தினம் ராணுவ வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, அதிகாலை 1 மணி அளவில் டி72 ராணுவ டாங்கியுடன் ஜூனியர் கமிஷன்ட் அதிகாரி உட்பட 5 பேர் ஷியோக் ஆற்றை கடக்க முயன்றனர்.

பனி உருகியதால் ஆற்றில் திடீரென ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் ராணுவ டாங்கி அடித்துச் செல்லப்பட்டது.

அதில் இருந்த 5 வீரர்களும் வீரமரணம் அடைந்ததாக ராணுவம் உறுதிபடுத்தி உள்ளது.

திராவிடத் தமிழர் கட்சித் தலைவர்

தோழர் வெண்மணி இணையர் சாவித்ரி மறைவு!

தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 01-

திராவிடத் தமிழர் கட்சித் தலைவர் தோழர் வெண்மணி அவர்களின் இணையர் திருமதி சாவித்ரி மறைவிற்கு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் -முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாரு:-

திராவிடத் தமிழர் கட்சித் தலைவர் தோழர் வெண்மணி அவர்களது இணையர் திருமதி. சாவித்ரி அவர்கள் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

மனைவியின் பிரிவால் வாடும் தோழர் வெண்மணி அவர்களுக்கும், அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் தொடர் 101 நிகழ்ச்சியாக நடைபெற்று வருகிறது. அதன்படி பாளை பகுதி 5 வட்ட இளைஞரணி சங்கர் ஏற்பாட்டில் பாளை சவேரியார் கோவில் வளாகத்தில் உள்ள புனித அந்தோணியார் தொடக்கப் பள்ளியில் பயிலும் 300 மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் இனிப்பு வழங்கும் நிகழ்வு பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று கல்வி உபகரணங்களை வழங்கினார்.நிகழ்வில் பகுதி துணைச் செயலாளர் முகமது கமாலுதீன்,இளைஞர் அணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான்,வர்த்தக அணி துணை அமைப்பாளர் மைக்கேல் ராஜேஷ், மற்றும் வேங்கை வெங்கடேஷ்,ஜான் கென்னடி பீரப்பா,சௌந்தரம் முத்துராஜ், வினோத் குமார்,கோபால கிருஷ்ணன்,உமர் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.